முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

இடைக்கால இலக்கியமும் புதினமும்:

அலகு : 1

பன்னிரு திருமுறைகள்:

1. திருநாவுக்கரசர் தேவாரம் - திருப்பதிகம் (திரு அங்கமாலை)
2. சுந்தரர் தேவாரம் - திருவையாற்றுப் பதிகம்.
3. மாணிக்கவாசகர் திருவாசகம் - சிவபுராணம்.
4. திருமூலர் திருமந்திரம் - இளமை நிலையாமை.

பக்தி - விளக்கம்:

'பக்தி' என்ற வடசொல்லிற்கு 'கலந்து நிற்றல்' என்பது பொருளாகும். இறைவனோடு கலந்து நிற்றலையே தமிழ்ப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன எனக் குறிப்பிடுவார் ப. அருணாசலம். தொடர்புடைய உறவினரிடம் காட்டும் விருப்பம் அன்பாகவும், உறவு கடந்த நிலையில் எல்லோரிடமும் காட்டும் நெகிழ்வுணர்வு அருளாகவும், நல்நெறியில் வழிகாட்டும் ஆசிரியரிடம் காட்டும் அன்பு திரு பக்தியாகவும் பேசப்படுகின்றன.

பக்தி இலக்கியத் தோற்றம்:

தமிழ்நாட்டில் சங்க காலத்திலேயே பக்தியுணர்வு இருந்தமையால்தான் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என்ற நான்கு நிலங்களுக்கும் முறையே சேயோன், (முருகன்) மாயோன், (திருமால்) இந்திரன், வருணன் ஆகியோர் தெய்வங்களாகக் கூறப்பட்டனர்.

Scanned with CamScanner

பாணை நிலத்திற்கு, கொன்றனை வெய்வமாக் கொள்ளப்பட்டது. கடவுள்கள் என்று சொல்லப்பட்டதும் அவர்கள் தொடர்பான வழிபாடும் அவர்களைப் போற்றிய நூல்களும் தோன்றின.

தமிழ் நாட்டில் பக்தி இலக்கியங்கள் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றன. எனினும் இலக்கிய வரலாற்றில் பல்லவர் காலத்தில் தோன்றிய சமய இலக்கியங்களையே பக்தி இலக்கியங்கள் என்று குறிக்கின்றனர். சைவ சமயத் தொடர்பாகத் தோன்றிய நாயன்மார்களும், வைணவ சமயத் தொடர்பாகத் தோன்றிய ஆழ்வார்களும் பல்வேறு வழிநிலைகளில் பக்தி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர்.

அலகு : 1

பன்னிரு திருமுறைகள்.

பக்தி இலக்கியச் சான்றோர்களின் பணிகளால் தமிழ் இலக்கியப் பணி மிகப் பெரியது. புதுமையானது. மறுமலர்ச்சி என்னும் சொல்லுக்கு கி.பி 6-ம் நூற்றாண்டு முதல் 10-ம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் பொங்கித் ததும்பியது சைவம், வைணவம் என்னும் இரு சமயச் சான்றோர்கள் பலர் இந்த எழுச்சியை முன்னின்று நடத்தினார்கள். இவர்கள் திருக்கோயில்களில் பணி செய்து, திருக்கோயில் வழிபாடு மீண்டும் தொடரச் செய்தனர். 'சென்னெறி' என்று பெரியோர்களால் ஒதுக்கப்பட்டிருந்த பாமர மனிதனையும் அரவணைத்துக் கொண்டு

Scanned with CamScanner

சமய வழிபாடுகளிலும் பண்பாட்டுப் பணிகளிலும் ஈடுபட்டனர். இதனால் ஒதுக்கப்பட்டிருந்த கலைகள் உயிர்ப்பு பெற்றன. தமிழிசையுடன் கலந்த பக்திப் பாடல்களை இயற்றி, பண்களுடன் பாடி, மக்களையும் பாடச் செய்தனர். திருக்கோயில்கள் கலைகளின் கூடாரம் ஆயின.

திருமுறைகள்:

திரு + முறை = திருமுறை. திரு - இறை. முறை - வணங்குதல். அதாவது இறைவனிடம் முறையிடுதல் என்பது பொருள்.

திருமுறைகள் பன்னிரண்டு. முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம். நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் திருநாவுக்கரசர் அருளிய தேவாரம். ஏழாம் திருமுறை - சுந்தரர் அருளிய தேவாரம். இந்த ஏழு திருமுறைகளையும் பொதுவாக 'மூவர் தேவாரம்' என்பர்.

தைவ இலக்கியம்: பன்னிரு திருமுறைகள்:

1. ஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பு 1, 2, 3 ஆம் திருமுறைகள்
2. அப்பர் தேவாரம் 4, 5, 6 ஆம் திருமுறைகள்
3. சுந்தரர் திருப்பாட்டு 7 ஆம் திருமுறை
4. மாணிக்கவாசகர் திருவாசகம், திருக்கோவையார் 8 - ஆம் திருமுறை.
5. திருமாளிகைத் தேவர் போன்ற 9 அடியார்கள் அருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 9 ஆம் திருமுறை
6. திருமூலர் திருமந்திரம் 10 ஆம் திருமுறை
7. காரைக்காலம்மையார் போன்ற 12 அடியார்கள் அருளிய பக்திப் பாடல்கள் 11 ஆம் திருமுறை

Scanned with CamScanner

8. சேக்கிழாரின் பெரியபுராணம் - 12 ஆம் திருமுறை.

1. திருநாவுக்கரசர் தேவாரம்

திருப்பதிகம் - திருஅங்கமாலை

தேவாரம் :

தே + ஆரம் = தேவாரம், தே - கடவுள், ஆரம் - மாலை = அதாவது கடவுளுக்குச் சூட்டப்படும் (பூமாலை போன்ற) பாமாலை என்பது பொருள். தே + வாரம் = தேவாரம், தே - கடவுள், வாரம் - இசைப்பாட்டு. அதாவது கடவுளைப் பற்றிய இசைப்பாட்டு (தெய்வத்திற்கு அன்பினால் பாடப் பெறும் இசை மாலை) என்னும் பொருள்படும்.

நூல் அறிமுகம் :

தெய்வப் பாமாலை பாடித் தமிழ்மண்ணைக்கும் புகழாரம் சேர்த்த பெருமை தேவாரம் பாடிய மூவர்க்கு உண்டு. அதிலும் அப்பர் எனப் பெயர்பூண்ட திருநாவுக்கரசர் பாடிய தேவாரம் அருட்கனியாக இனிக்கக் கூடியது. பல்லவ அதிர்ச்சிக்கு ஏற்ப, பக்திமான நானாங்களிந்த நுகர்ச்சியை திருநாவுக்கரசரது பாடல்களில் காணலாம். மனிதக் காதலைத் தெய்வக் காதலாக மாற்றிய புண்ணியர். இவருடைய பாடல்களில் சோலையின் அழகும் வானத்தின் செறிவும் நிறைந்து விளங்குவதைக் காணலாம். இயற்கையின் எழிலோடு இறைவனைப் பாடிப் போற்றியவர். இவரது பாடல்கள் அக திருமணையும்

Scanned with CamScanner

புற இருளையும் போக்கினை உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாக்கினை.

ஆசிரியர் அறிமுகம்:

திரு முனைப்பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்தவர். தந்தை புகழனார். தாய் மாதினியார். தமையனார் மருள்நீக்கியார். இளமையால் நாவுக்கரசர் என்றும். திருவாளாகம்பந்தரால் அப்பர் என்றும் அழைக்கப் பெற்றவர். வாகீசர் என்றும் சிறப்புப் பெயரும் இவருக்கு உண்டு. கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவருக்கு ஒரு தமக்கையார் இருந்தார். திலகவதி என்னும் பெயர் கொண்ட அந்த அம்மையார் கலிப்பகையார் என்னும் போர் வீரரை மணக்க இருந்த காலகட்டத்தில் அம்மணவிழா நிகழாமற் போனது கலிப்பகையார் கூற்றில் வீரமரணம் எய்தியதே அதற்குக் காரணம், பின்னர் அவர் தம் தம்பியின் வாழ்ட்டு மணம் செய்து கொள்ளாமலேயே வாழ்ந்தார்.

திருநாவுக்கரசர், பெற்றோரை இழந்த நிலையில் சமணத்தை ஏற்றுக்கொண்டு சமணம் சார்ந்து பாடலிபுத்திரம் சென்றார். அங்கு சமண நெறியில் மேலும் புகழும் பெற்றுத் தருமசேனர் என்னும் பட்டமும் பெற்றார். அவரை மீண்டும் சைவத்திற்கு மாற்ற வேண்டும் என்னும் ஒரு கிறிக்கோள் கொண்டவராகச் சிவத்தொண்டு செய்து வந்தார் தமக்கை திலகவதியார்.

Scanned with CamScanner

திருநாவுக்கரசருக்குக் கொடிய சூலை நோயைத் தந்து அவரைச் சைவம் சாருமாறு செய்தார். சிவபெருமான் உண்மையறிந்து உணர்ந்த திருநாவுக்கரசர் அன்று முதல் தலந்தோறும் சென்று கிறைவனைப் பாடி அருள் தொண்டு செய்யலானார்.

தம் திருக்கரத்தில் 'உழவாரம்' என்னும் கணை கொட்டும் கருவி ஒன்றினைக் கையில் ஏந்திக் கோயில் முன்னர்க் கிடந்த புல்லையும் முள்ளையும் செதுக்கி அழகுவார்கள் கோயில் செல்வதற்கு ஏற்ற பாதை அமைக்கும் திருப்பணியில் அவர் ஈடுபட்டார். இறுதியில் இறைவன் திருக்கைலாயத்தைத் திருவையாற்றில் கண்டு கழிபேருவகை எய்தினார்.

எண்பத்தோராண்டுகள் நிலவுலகில் வாழ்ந்த திருநாவுக்கரசர் தாண்டக வேந்தர் என்று புகழ் பெற்றார். நெஞ்சை உருக்கும் அழகிய பாடல்கள் பலவற்றைப் புனைந்தார். இவர்மீது மிக்க அன்புடையவராகத் திகழ்ந்தவர் அப்பூதி அடிகளார் என்னும் ஈசன் அன்பர். இவரைக் காணாமலேயே தம் பிள்ளைகளுக்கு வைத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்னும் பெயர் இட்டார். தாம் அமைத்த தண்ணீர் பந்தல் அன்னசாலை முதலான அனைத்துப் பணிகளுக்கும் திருநாவுக்கரசர் பெயரையே சூட்டினார்.

Scanned with CamScanner

திருப்பூந்துருத்தி (திரு அங்கமாலை)

பாடல் அறிமுகம்:

தலை, கண், செவி, மேக்கு, வாய், கை, உடல், ஆகியவற்றை வினித்துக் கூறுவதால் திரு அங்கமாலை எனப்படுகிறது. இத்திருப்பாடல் மனதிற்குக் கூறாமல் என் சான் உடம்பில் தலையே பிரதானம் என்ற நினைவில் தலையை நோக்கி கூறியுள்ளார் எனலாம். நெஞ்சம் நினைந்து போற்ற இவ்வுடலின் பிரதானம் உறுப்பான தலையை வினித்துக் கிரியா வழிப் பாடலாக கூறப்பட்டது. எனவே அங்கமாலை எனப் பெயரும் பெற்றது.

பாடல் சிறப்பு:

திருநாவுக்கரசர் சிவனைத் தலைவணங்குதலே அனைவருக்கும் தலையாயப் பணி என்று நினைப்பிக்கிறார். எ-சனின் தரிசனம் காண்பதலே கண்களின் பயன் என்றும், சிவனது புகழ்ப் பாடல்களையும் அருட் செயல்களையும் கேட்க வேண்டும் என்றும், தியானத்தின் வாயிலாக 'நமசிவாய' நாமத்தை உச்சரிக்கும், எ-சனது புகழை வாயார வாழ்த்தியும் எ-சனை மனதில் அடியாய் நினைத்தும், திருக்கரங்களால் கைங்கரியம் வணங்குக என்று எ-சனை வணங்கும் முறையை திருநாவுக்கரசர் வினக்குகிறார்.

Scanned with CamScanner

மேலும் அவர் ஈசன் திருக்கும்
திருக்கோயிலைச் சுற்றி வருதலே முதன்மையான
பயன் என்றும், அவனது திருத்தலத்தை வலம்
வருதலே காலனின் பயன் என்றும் கூறுகிறார்.
ஈசனே என்றென்றும் உயிர்க்குத் துணையாய்
நிற்பவன். நமது உடல் - அங்கங்களின்
முறையான வழியாக முழுமை ஆனவும்
முதலான தீக் குணங்களை நீக்க முடியும்
என்கிறார். மனம் ஒன்றிய இந்தகைய
உண்மையான வழிபாட்டால் ஈசன் நம்
உள்ளத்தில் உறுதியாக எமனை வென்றார் என்றும்
கூறுகிறார்.

1. சிவபெருமான் எதனை மாலையாகக் கொண்டு
பலி ஏற்றார்?

சிவபெருமான் பிரம்மனுடைய தலையைக்
கலனாகக் கொண்டு பலி ஏற்றவர். அப்பெருமான்
தலைகளை மாலையாகக் கொண்டவர்.

2. கோகரணம் - குறிப்புத் தருக.

நீலகண்டனாக விளங்கும் ஈசனின்
திருக்கோயில்களை 'கோகரணம்' என்பதாகும்.
அத்திருத்தலத்தை வலம் வருதலே காலனின்
பயனாகும்.

Scanned with CamScanner

சுந்தரர் ஒருவாரம்

திருநெய்தானப் பதிகம்

சுந்தரர்:

இயற்பெயர் நம்பியாரூரன். இவர் பாடிய திருத்தொண்டத் தொகைகளே வரிய புராணத்திற்கு அடிப்படை. இவர் பாடிய 38000 பாடல்கள் கிடைத்தன. 1026 பாடல்கள். இவர் பாடியவை ஏழாம் திருமுறையில் இடம்பெறுகின்றன. இவர் 81 ஆண்டு வரை வாழ்ந்தார். பரவையாரைக் காதல் மணம் புரிந்து கொண்டார். வேளாளர் குலப் பெண்ணான சங்கிலி நாச்சியாரை இரண்டாம் மனைவியாகத் திருமணம் புரிந்து வாழ்ந்தார். இவரது கி.பி 7 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும். இவரது அடிகளில் மயங்கிய நரசிங்க முனையரையர் என்பவர் திருநீலமலையரால் தடுத்து நிறுத்தப்பட்டு உண்மை உணர்ந்தார். சுந்தரர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள்:

* 12,000 பொன்னை மணிமுத்தாற்றில் போட்டு கமலாலயத்தில் எடுத்தார்.
* இவர் பொருட்டு கனபதி விநாயகர் ஆவு இரண்டு தூதாகச் சென்று நின்றது.

Scanned with CamScanner

* திருப்புகழாரில் தலையில் வைத்த வாங்கல் தங்கக்கிண்ணமாக மாறியது.
* வாழ்நாள் முழுவதும் மணக்கோலத்துடனேயே வாழ்ந்தார்.
* சனிநாகியில் தலை உண்ட பாலனை, கணவாய் தலையைப் பின்னைதர்ச் சொல்லு காவணைலே' எனப்பாடி உயிரோடு வரச் செய்தார்.

பதிக வரலாறு:

பரணையார் மானிகையில் தங்கி திருவாரூர் பெருமானைச் சேரமான் பெருமானும் நம்பிகளும் வழிபட்டு வந்தனர். அப்பொழுது சேரர் நம்பிகளிடம் மலைநாட்டுக்கு வந்து அருள்புரிய வேண்டும் என்றார். பரணையாரது அனுமதி பெற்று இருவரும் புறப்பட்டனர். காவிரியின் தென்கரையிலுள்ள கண்டியூர் இறைவனை வணங்கி, வடகரையிலுள்ள ஐயாற்று இறைவனை வழிபட விருப்பம் கொண்டனர். காவிரியில் வெள்ளம் பெருகி, ஓடையனையால் கரையைக் கடக்க ஓடமும் கிடைக்காத நிலையில், நம்பிகள் திருவதிகைத்தைப் பார வழிபட காவிரி நீர் வழிவிட்டது என்பர்.

தலச் சிறப்பு (திருவையாறு)

திருவையாறு தந்தை நகருக்கு அண்மையில் உள்ள ஊராகும், காவிரி, குடமுருட்டி வெண்ணாறு, வெட்டாறு, வடவாறு என்னும்

Scanned with CamScanner

ஐந்து ஆறுகள் பாய்வதால் ஐயாறு எனப்பெயர் பெற்றது. சப்தஸ்தானம் என விளங்கும் ஏழு தலங்களில் இது முதன்மையான தலம். திருமகள் பூசித்து நலம் செய்யும் தலமாகவும் கருதப்படுகிறது. இக்கோயிலில் உள்ள இறைவன் ஐயாறப்பர். இறைவி அறம் வளர்த்த நாயகி, தீர்த்தம் ஐயாற்றுத் தீர்த்தம், தலவிருட்சம் வில்வம் ஆகும்.

பாடல் சிறப்பு:

சுந்தரர், நான் முன்பெல்லாம் இறைவனை நினைத்திருந்தாலும், வழிபடும் முறையை நான் இன்னும் அறியவில்லை என்கிறார். மேலும் அவர் "என்னை ஆட் கொண்ட பெருமானே! என் குறையைத் தீர்த்து அருள்க: நான், பயன் கருதி நட்புக் செய்பவன் அல்லன். அழகைப் பார்த்து பணி செய்பவன் அல்லன். நான் அறியாமல் செய்த பிழையை நீக்குக" என்று இறைவனை நோக்கி வேண்டுகிறார்.

மேலும் சிவனே, முன்னவன் பின்னவன் இல்லவன் எவன் என்றும் உனையனை திடப்பாகத்தில் கொண்டு பிச்சை ஏற்று அம்பினால் முப்புரம் எரித்தவன் என்றும் சிவனைப் பற்றி பேசுகிறார்.

Scanned with CamScanner

3. மாணிக்கவாசகர் திருவாசகம்

சிவபுராணம்.

மாணிக்க வாசகர்.

திருவாதவூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். அரிமர்த்தனப் பாண்டிய மன்னனிடம் தென்னவன் பிரமராயன் என்ற பட்டம் பெற்று அமைச்சராகப் பணிபுரிந்தார். 'வாதவூரடிகள்' என்ற வேறும் இவருக்கு உண்டு. மாணிக்கவாசகர் சிவபெருமானிடம் மிகுந்த அன்பு கொண்டவர்.

மாணிக்கவாசகர், அதிகம் பாண்டியனிடம் அமைச்சராகப் பணிபுரிந்தார். பாண்டிய நாட்டுத் திருக்கோயில்களில் பாடிய இவரது பாடல்களை மீண்டும் பாடுமாறு இறைவன் பணித்தான். வாதவூரார் பாடிவை அவற்றை இறைவனே முதலில் எழுதினான் என்பர். மாணிக்கம் போன்ற அப் பாடல்களைப் பாடியதையால் இறைவன் வாதவூரானை மாணிக்கவாசகர் என்று அழைத்தான் என்பர். இவர் அறிவுநிலையாகிய ஞானத் தொண்டாற்றியவர். திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் சிவகுருவடிவாய் நின்று ஆட்கொள்ளப் பட்டதும் 'நமச்சிவாய வாழ்க' என்று தொடங்கும் சிவபுராணமே ஞான மெய்ந் நெறியினை உணர்த்துவதாகும்.

Scanned with CamScanner

திருப்புகாணம் பாடல் அறிமுகம்:

திருவாசகத்தின் முதற் பகுதி ஆகும் ஐந்தெழுத்தை முதலாகக் கொண்டே தொடங்கும் இப்பதிகம் அடியார் தன்மையில் சிறப்பிடம் பெற்றிருப்பது தென் பெருமையைப் பறை சாற்றும்.

மாணிக்கவாசகர் பெருமான் பரம்பொருளாகிய சிவன்னவ் பலவாறெல்லாம் விளித்து, அவர் திருவடிகளுக்குத் தம் கையை உளமார்ந்த வணக்கங்களைக் கூறித் தொடங்குகிறார். சிவனான உயிர் தும் மலச் சேற்றில் அமிழ்ந்து சிதைந்த நிற்கும் காலமும் அச்சீவனைக் சிவபெருமான் திருவருளால் ஏற்றுக்கும் மேம்பாடையும் கூறி இறுதியாக அச்சிவபெருமானின் திருவடிக்குச் சென்றும் பெருநிலையை நமக்குக் காட்டுகின்றார்.

பாடல் திறப்பு:

மாணிக்கவாசகர், சிவனை வழிபடும் முறைகளை பின்வருமாறு வலியுறுத்துகிறார். எனது 'நமசிவாய' நாமத்தைக் கூறி, அவனது திருவடிகளை வணங்க வேண்டும் என்கிறார். இவனின் திருவடிகளை வணங்குவதால் எனில் வல்வினைகள் பொறாம். சிவனின் அருளைத் துணைக் கொண்டு வேதங்களை ஓதினால் பாவங்கள் நீங்கும் என்றும் கூறுகிறார். பாவங்களைத்

செய்பவரால் இறைவனை அறிய முடியாது என்கிறார். உலகத்து உயிர்களுக்கு பல பிறவிகள் இறைவனால் அருளப்படுகின்றன. மேலும் அவர் பல பிறவிகளைக் கடந்து மனிதப் பிறவியில் பிறந்து ஈசனை வணங்கியதால் வீடுபேறு அடைந்ததாகக் கூறுகிறார்.

மேலும், இறைவன் இன்பத்தை அளிக்கும் மலைக்கண்ணை நீக்குபவனாக விளங்குகின்றான். படைத்தல், காத்தல், அழித்தல், அருளுதல் இவை அனைத்தும் இறைவனது செயல்களாகக் கூறுகிறார் மாணிக்கவாசகர்.

அடியவர் மனதில் நிலைத்திருக்கும். இறைவனுக்கு இன்பமும் துன்பமும் இல்லை. பல வடிவங்களைக் கொண்ட இறைவனை மெய்ஞ்ஞானம் உள்ளவர்களால் மட்டுமே உணரமுடியும். பல நிலைகளில் உணரக் கூடியவன் இறைவன். அடியார்கள் போற்றும் இறைவன், தெளிவான அமிர்தமாய் இருப்பவன். திருப்பாதத்தில் நிகழும் இறைவன் அடியவர்களின் மெய் உடனைத் தவிர்ப்பவன் சுவாமி. இறைவனின் சொரூபத்தை உணர்பவர்கள் அவனது சன்னதியை அடைவார்கள் என்று இறைவன் ஈசனின் சிறப்புகளாக மாணிக்கவாசகர் கூறிவிடுகிறார்.

Scanned with CamScanner

4. திருமூலர் திருமந்திரம்.

இணைய நிலையாணை

திருமூலர்:

திருமூலர் தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டவர். அதனால் இவர்தம் காலத்தைக் கி.பி 5-ஆம் நூற்றாண்டு எனல் தகும்.

திருமூலர் வரை சித்தாந்தத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார். இவர் நந்திதேவரின் அருள் பெற்ற சிவயோகி. திருமூலர் குறித்து கதை ஒன்று கூறப்படுகிறது. பட்டிக்கரம் ஒருங்கே கைவரப் பெற்ற சித்தர் ஒருவர் வட நாட்டுச் சிவத்தலங்களை தரிசித்து விட்டு வரும்போது திருவாவடுதுறை அருகில் உள்ள சாத்தனூருக்கு வந்தார். அங்கே மூலன் என்பவன் இறந்து கிடந்தான். அவன் மேய்த்துக் கொண்டிருந்த பசுமாடுகளின் வருத்தம் கண்டார். சுவடுவிட்டுக் கூடு பாயும் அட்டமாசித்திகளும் அறிந்த யோகியாதலால் மூலன் உடலில் புகுந்து அவனாகவே வந்து ஊர் சேர்ந்தார். விட்ட இடத்தில் அவரது உடல் காணாமல் போகவே மூலனது உடலிலேயே இருந்து திருவாவடுதுறை அரச மரத்தடியில் யோகத்தில் இருந்தார். மூலன் உடலில் இருந்தமையால் திருமூலர் எனப்பட்டார். அதன்பிறகு ஒருநாள் விடியற்காலை ஒரு பாடல் வீதம் 3000 பாடல்களை பாடினார். இதன் தொகுப்பே திருமந்திரம் எனப்பட்டது.

Scanned with CamScanner

திருமந்திரம்:

திருமந்திரம் என்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்நூலில் உள்ள பாடல்கள் எளிமையும் இனிமையும் அடிமுடி நேரைந்தவை. நிலையாமை, கள்ளுண்ணாமை முதலான வாழ்வியல் அறங்கள், அட்டமாசித்திகள், சோதிடம், மனை உள்ளவைகள் முதலானவை நமது கண்ணைப் பறிக்கின்றன. திருமந்திரம் அன்பே வாழ்வின் முன்னேற்றத்தைப் பாடும் நூலாகும்.

நூற் சிறப்பு:

திருமந்திரம் மனவாசகம் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகும். திருமந்திரத்தில் மூவிரமும் என்பது தந்திரங்களும் உள்ளன. தந்திரம் என்பது இந்நூலைப் பொறுத்தவரையில் நூலின் உட்பிரிவு எனலாம். தந்திரம் என்பது நூலின் உட்பிரிவு ஆகும். இயல், படலம், காண்டம், சருக்கம் என்பனவைபோல் தந்திரம் நூலின் உட்பிரிவு.

இதன்கண் உள்ள ஒன்பது தந்திரங்களுள் முதல் நான்கு தந்திரங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் உணர்த்துகின்றன. ஐந்து முதல் ஒன்பது வரையில் உள்ள ஐந்து விட்டுவிலை, விடுபேற்றை வழி, வழிபாடு, வழிபாட்டு முறை, வாழ்வு ஆகிய ஐந்தையும் உணர்த்துகின்றது.

Scanned with CamScanner

சந்தியரின் சிறப்புகள்:

திருமந்திரத்தை அருளியவர் திருமூலர். திருமூலர் திருவாடுதுறையில் இருந்த ஓர் அரசமரத்தின்கீழ் அமர்ந்தார். மூவாயிரம் ஆண்டு தவம் செய்தார். அதன்பின் ஒரு பாடலை இயற்றினார் என்று செய்தி பெரிய புராணத்தில் பேசப்படுகின்றது. இவரின் காலம் 8 ஆம் நூற்றாண்டாகும்.

தமிழில் தோன்றிய முதல் யோக நூல் இதுவே! முதல் சித்தரும் இவரே! நந்தியப் பெருமானிடம் உபதேசம் பெற்றார்.

பாடல் அமைப்பு:

சைவ சமயத்தின் சித்தாந்தக் கருத்துகளை முதன் முதலில் தெளிவுபடுத்திய நூல் இதுவே ஆகும். இதனை சேக்கிழார் தமிழ் மூவாயிரம் என்பார்.

சித்தாந்த சாத்திர நூல்கள், சிவஞானபோதம் உள்ளிட்ட பதினான்கும் ஆகும். இவை தோன்றுவதற்கு முன் இருந்தது திருமந்திரம் ஆகும். மற்றவை திருமந்திரத்தின் விரிவாக்கம் என்று கூறினும் பொருந்தும்.

திருமந்திரத்தில் மொத்தம் ஒன்பது தந்திரங்கள் உள்ளன. அவற்றுள் 232 அதிகாரங்கள் உள்ளன. பாடல்களின் மொத்த எண்ணிக்கை 3000 ஆகும்.

Scanned with CamScanner

பாடல் சிறப்பு:

திருமூலர் தனது திருமந்திரத்தில் உலக மக்கள் இளமை நிலையற்றது என்பதை உணராதவர்களாகவும், இறைவனை அறியாதவர்களாகவும் உள்ளனர் எனக் கூறியுள்ளார். மனிதர்கள் தங்கள் இளமைக் காலத்திலேயே இறைவனைப் போற்றுதல் வேண்டும் என்றும், பெண்களுக்கு அவர்களது உடலானது இளமைக் காலத்தில் இனிமையையும் முதுமையில் நோய்களையும் தருவதாக உள்ளது என்றும், மனிதர்கள் தங்கள் பருவங்கள் மாறுபடு அறியும் முன் இறைவனை ஏன்றுதல் வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.

காலையில் தூயில் எழுவதும், இரவினில் உறங்குவதும் தூங்கிவிழுவதையே எப்போதும் செய்து கொண்டிருக்காமல் இறைவனை மனதில் நினைத்து அனுதினமும் வழிபடுவதால் தூய வாழ்நாளில் இன்பம் அடையலாம். மேலும் இவ்வாறு வழிபடுவதால் மனிதன் தன் உடல் மீது கொண்டுள்ள பற்று நீங்கும். மனிதனது வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் கணக்கிடப்படுகிறது. இறைவனை நினைக்காதவர் மறுபிறப்பு எடுப்பர். ஆகையால் இளமையிலேயே இறைவனை வழிபடத் தொடங்க வேண்டும் என்று இறைவனை வழிபடுதலின் இன்றியமையாமையை நடத்தி திருமூலர் உணர்த்துகின்றார்.

Scanned with CamScanner

அலகு - 2

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

அறிமுகம் :

சமணம், பௌத்த சமயங்களின் அதிக்கத்தால் வீழ்ச்சியுற்ற தமிழர் சமயநெறிகளுக்கும் பண்பாட்டிற்கும் கடைக்கழகத்தில் முற்பகுதியில் எழுச்சி உண்டாயிற்று. இந்த எழுச்சி கி.பி 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 9-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் மேலோங்கியது. சைவம், வைணவம் என்னும் சமயம் சார்ந்த சான்றோர்கள் பலர் இந்த எழுச்சியை முன்னின்று நடத்தினார்கள்.

படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் முத்தொழில்களுள் காத்தல் தொழிலைச் செய்பவர் திருமால், வைணவ சமயத்தினரின் வழிபடு தெய்வம் அவதாரங்கள் பத்தையுடைய அரிதுயிலை அழித்து நிலவுலகைக் காத்து நிற்கும் நெடுமாலே திருமால்.

திருமாலை முழுமுதற் கடவுளாக வைணவராகக் கொண்டு வழிபட்டோர் ஆழ்வார் எனப்பட்டனர். ஆழ்வார் பன்னிருவர். அவர்கள், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவியாழ்வார், ஆண்டாள் ஆகியோர். அவர்கள் திருமாலடியார்கள் எனப் பெயர் பெற்றனர்.

Scanned with CamScanner

அவர்களால் அருளப்பட்டதே நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் அருந்தமிழ் மறைகள் ஆழ்வார் என்னும் சொல்லுக்கு அடிந்தறியும் அறிவைக் கருவியாக உடையவர் என்றும் எம்பெருமானுடைய மங்களக் குணங்களில் ஆழங்காற்பட்டவர் என்றும் பொருள் கூறுவர்.

ஆழ்வார் - சொற்பொருள் விளக்கம்:

'ஆழ்வார்' என்னும் சொல்லுக்கு இறைமைக் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர் என்பது பொருள். வேறெவற்றிலும் கண்ணையாது பகதி குணங்களிலே ஆழங்காற்பட்டிருந்தமையால் இவர்களுக்கு ஆழ்வார்கள் என்று வியாதியிற்று எவர்.

திவ்வியப் பிரபந்தம்:

பிரபந்தம் என்பது வடசொல், நன்றாகக் கட்டப்பட்டது என்னும் பொருளில் நூலைக் குறிப்பதாகும். அதனோடு 'திவ்வியம்' என்னும் அடை சேர்ந்து 'திவ்வியப் பிரபந்தம்' ஆயிற்று 'திவ்வியம்' என்னும் சொல் தெய்வீகமான பொருள்களைக் குறிக்கவே பயன்படுகின்றது. வைணவ நெறியில் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் 'திவ்விய தேசம்' எனவே வழங்கி வருகின்றன. இறைவனால் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் அருளப்பட்ட தெய்வப் புலவர்களான ஆழ்வார்கள்,

Scanned with CamScanner

திவ்விய சூரிகள் என்றே சிறப்பிக்கப்படுகின்றனர்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டது. இந்நூல் பன்னிரண்டு ஆழ்வார்களால் பாடப்பெற்றது. 4000 பாடல்களைத் தெய்வமணங்கமழுமாறு தீட்டியுள்ளனர். இப்பாடல்களை, நாதமுனி, என்பவர் தொகுத்தளித்தனர். இதனை திராவிட வேதம், தமிழ் வேதம் எனவும் வழங்குவர்.

இப்பாசுரங்களில் பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவியாழ்வார், ஆகிய நால்வர் பாடிய பாசுரங்கள் நம் பாடப்பகுதியில் உள்ளன.

1. பெரியாழ்வார் திருமொழி

நற்றாய் புலம்பல்

தென்பாண்டி நாட்டில் திருவில்லிப்புத்தூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். இவருடைய இயற்பெயர் விஷ்ணு சித்தன். 'பட்டர்பிரான்' என்றும் வைணவர்கள் போற்றுவார்கள். நிலமகளின் அம்சமான ஆண்டாள் நாச்சியாரின் வளர்ப்புத் தந்தை. ஆதலால் ஆழ்வார்களுள் பெரியவர் என்னும் கருத்தில் பெரியாழ்வார் என்றும் அழைக்கப்படுகிறார்.

Scanned with CamScanner

மகுடை மன்னன் வல்வில் தேவனுடன் வாதாடி வைணவத்தை நிலைநாட்டினார். இவரது காலம் கி.பி 4 - ஆம் நூற்றாண்டு என்பர்.

நந்தவனத்தை அமைத்து இறைவன் திருமுடிக்கு நறுமாலை சார்த்தும் பணி புரிந்தார். அந்தோம் பல பா மாலைகளையும் புனைந்து சூட்டினார். இவரது பாசுரங்கள் 'வெரியோதிவார் திருமொழி' என்று குறிப்பிடுகின்றன. இவை திவ்யப் பிரபந்தத்தின் தொடக்கப் பகுதியாக வைக்கப்பட்டுள்ளன. வெரியோதிவார் திருமொழியின் முதல் 12 பாடல்கள் திருப்பல்லாண்டு எனப்படுகின்றன.

வெரியோதிவார் 473 பாசுரங்களைப் பாடியுள்ளார். கண்ணன் திரு அவதாரச் சிறப்பு, திருப்பாதாதிகேச வருணனை, அப்புச்சிகாட்டல் என்று பல உட்பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றிரண்டு தவிர ஏனைய யாவும் 10 பாடல்களைக் கொண்ட பதிகங்களாகும். இறுதிப் பாடல் பதிகத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை, இயற்றிய ஆழ்வாரின் பெயர், அதனைப் பழிப்பதனால் உண்டாகும் பயன் ஆகிய செய்திகளைக் கொண்டுள்ளது.

வெரியோதிவார் கண்ணனின் வளர்ப்புத் தாயாகிய யசோதைப் பிராட்டியாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு, தனது திருவடி தொழும் தெய்வமான திருமாலின் திருவடிகளில் எழுதலைக்

Scanned with CamScanner

கண்டு கனிக்க வெளாறு ஆடலாகவும் வெண்கணைக் கூதி அழைக்கிறார் திருப்பாற்றி சோராந்தும் ஏதம் பக்தி மரணை ஆழ்வார் செல்வனை பின்பற்றியுள்ளார்.

குழந்தைக் கண்ணனை யசோதைத் தாய் சீராட்டும் தாலாட்டு அவ்வியை அழைத்தல், செங்கீரை ஆடுமாறு கூறுதல், சப்பாணி கொட்ட வேண்டுதல், தளர்நடை நடந்து வருக என்று கூறல். கண்டு மகிழ்தல் என்று பலவற்றையும் நம் மாசாரங்களில் அமைத்துள்ளார். இவை யாவும் அக்காலத் தமிழகத்தின் பண்பாட்டுச் சிறப்புகளாகும். இம்முயற்சியே பிற்காலப் பிள்ளைத் தமிழ் இலக்கிய வகைக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது.

பாடல் சிறப்பு:

பெரியாழ்வார், நற்றாய் புலம்பல் எனும் பகுதியில் ஒரு தாய் தன் மகன் இல்லாததால் அவனது இல்லம் அடிகிணை இழந்துவிட்டது. என்றும் தன் மகனை நாராயணன் அழைத்துச் சென்று தன் கைத்தலத்தில் ஏற்றுக்கொண்ட பெருமை என்றும் புலம்புவதாகவும் பெரியாழ்வார் குறிப்பிடுகிறார். தனது உறவினர்களின் முன்னிலையில் தன் மகனுக்கு திருமணத்தை முடித்து வைக்க வேண்டும் என அத்தாய் எண்ணுகிறாள். திருமாலின் தாயாகிய யசோதை தன் மகனைத் தன் மருமகனாக ஏற்றுச் சிறப்புச் செய்தல் வேண்டும். என்றும், திருமாலின் தந்தையாகிய

நந்த கோபாலன் தன் மகனை ஏற்று அன்பு காட்டுதல் வேண்டும். என்றும் தன் மகளும் திருமாலும் மணம் ஒருந்தி விரும்பியபடி வாழ்தல் வேண்டும். என்றும் எவளது தாய் விரும்புகிறாள்.

அங்ஙனம் தன் மகளுக்கு திருமணம் நடந்துவிட்டால் தன் மகன் திருமணத்திற்குப் பின் அரசகுமாரி போல் இருப்பாளோ! அல்லது கைப்பெண் என்று இழிவுபடுத்தி விடுவாளோ! என்றும் நாட்டை நடப்புக்கு ஏற்ற கனியுவக்கனை திருமால் செய்ததில்லை என்றும் தன் மனைவி அடைத்துச் சென்ற திருமால், தன் மகளுக்கு பிற பணிக்கனைக் கொடுத்து அவளுடைய பெருமையும் நிலைபெறுமாறு இதிகாசம் செலுத்துவாரோ, என்றும் ஐயம் கொள்கிறாள். இவ்வாறு தாயின் புலம்பலாக வெளியிடுவார் தனது பாசுரங்களில் இறைத்துள்ளார். இப்பாசுரங்களைப் பாடுவோர், கண்ணனின் போது பெறுவர் என்றும் கூறியுள்ளார்.

கைடயர்கள் - குறிப்புரைக்க:

கைடயர்கள் அறிவு சிறந்தும் இல்லாதவர்கள், எளிமையான தோற்றத்தை உடையவர்கள், அவர்களுடைய இளம் பருக்களைக் கானைகள் ஏறி மிதிக்கும்.

திருமால் எவ்வழக்கப்படி திருமணம் செய்தார்?

சகடாசுரனை உதைத்து அழித்தவன் அவ்வெருமான். ஆவடர் மறவர் குல வழக்கத்தின்படி தன் விருப்பப்படி மணந்துவிட்டார்.

Scanned with CamScanner

2. தொண்டரடிப் பொடியாழ்வார்

திருமாலை

தொண்டரடிப் பொடியாழ்வார்:

திருவரங்கத்து இறைவனாகிய அரங்கனுக்காக (திருமால்) பூமாலை செய்வதற்கு வேண்டிய நந்தவனம் அமைத்திருந்தார். நந்தவனத்தில் அன்று பூத்த மலர்களைப் பறித்து அழகான பூமாலைகளாகத் தொகுத்து அரங்கனுக்கு சமர்பித்து வந்தார். அவ்வேளையில் தேவதேவி என்ற சோழ நாட்டுக் கணிகையின் அழகில் மயக்கம் கொண்டு தன்னையே மறந்தார். கணிகையால் தன் செல்வம் யாவும் இழந்து போகுக்காக அரங்கன் தன் கோயில் வட்டிலைக் கொடுத்து உதவினார். அதைக் கொண்டு பழி இவர் மீது விழ்ந்து அரசன் முன் இவரை இழுத்துச் சென்றது. முடிவில் அரங்கனால் உலகத்தின் உண்மை அறிவிக்கப்பட்டதோடு, இவரையும் ஆட்கொண்டார். மீண்டு வந்த இவர் தன் இறுதிவரை அரங்கனுக்கே அடிமை பூண்டார். இன்னார் தான் செய்த தவறுக்காக வேட்கப் பட்டார். பாவம் நீங்க திருமாலின் தொண்டர்களின் பாதத் தீர்த்தத்தை உட்கொண்டு பாவ மன்னிப்புத் தேடினார். ஆகவே இவர் தொண்டரடிப் பொடி என அழைக்கப் படுகிறார்.

Scanned with CamScanner

பாடல் சிறப்பு:

தொண்டரடிப் பொடியாழ்வார், திருமால் மருத்திருக்கும் காட்சியைக் அவரது உள்ளத்தை மட்டுமின்றி உடலையும் உருக்கவைத்ததையும், திருமால், மணந்தால் அனைத்து முடியாத அழகுடையவன் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் திருமார்பு முதலான திருமாலின் எனி உருவத்தை அடியவர்கள் காணுதல் வேண்டும் என்றும் தாய மணமுடையவர்க்கே அருள்படக் கூடியவனாக திருமால் திகழ்கிறார் என்றும், திருமால் தூயில் கொள்ளும் அடிகு அழியவர் மனதில் நீங்காத இடம் பெற்று விளங்கும் என்றும், திருமால், அடியவர் மனதை நெகிழ வைக்கக் கூடியவன் என்றும் திருமாலின் சிறப்புகளாக தொண்டரடிப்பொடியாழ்வார் குறிப்பிடுகிறார்.

மேலும் இந்தத்தை இழந்த தனக்கு இரைவனை கருணை காட்ட வேண்டுகிறார். அவரது பிறப்பின் பயன் அரங்கனுக்கு பணி செய்வதே ஆகும் என்று குறிப்பிடுகிறார். திருவரங்கனுக்கு பணிவிடை செய்ய முடியாமல் போகும் தருணங்களில் மனம் நொந்து கொள்வதாகவும் கூறுகிறார். பணி செய்யாத அடியவர்க்கும் திருமால் அருள் செய்வான் எனவும், தன்னைக் காப்பாற்றி அருள்புரியும் அரங்கனை,

Scanned with CamScanner

தனக்கு உறவானவன் என்றும் மனத்துய்மை இல்லாத அடியவர்க்கும் இறைவனை புகலிடம் ஆவான் என்றும் தொண்டரடிப் பொடியாழ்வார் கூறிப்பிடுகிறார். இறைவனுக்கும் உறவினர்க்கும் பயன்படாதவர் பிறவி வீணானதாகும். இறைவனை அடையும் வழி தெரியாதவர்கள் கூட்டமாய், கண்மூடியாய் இருக்கின்றனர் என்றும் கூறி திருமாலின் பெருமைகளை விளக்குகிறார்.

'மனம்' எதனைச் செய்வதாகப் பொடியாழ்வார் கூறுகிறார்?

திருமாலின் தாமரைத் திருமுகத்தைக் கண்ட பின்பும் மனமே! கல்லாய் இருக்கின்றாய். அவன் ஒப்பற்றவன் என்று அறிய மாட்டாயோ! பொய்யான அன்பு கொண்டு கள்ளச் செய்கையிலேயே காலம் கழிக்கிறாயே என்று கூறுகிறார்.

'தீ' - பொருள் தருக.

மூன்று தீ என்பது நெருப்பு என்பதாகும். அவை, காருகபத்தியம், ஆகவனீயம் தக்ஷினாக்கினி எனும் மூன்று அக்னி ஆகும்.

கூடமாற்று - அணியின் செயல் யாது?

அணில், தண்ணீரில் மூழ்கி, பின்னர் கரை மணலில் புரண்டு ஓடி கூடலை வலி அமைக்கும் கூடலைத் தூர்க்கும் பாடுபட்டது.

Scanned with CamScanner

3. திருப்பாணாழ்வார்

அமலன் ஆதிபிரான்.

திருப்பாணாழ்வார்.

சோழவள நாட்டின் தலைநகராக விளங்கிய உறையூரில் கி.பி 8ஆம் நூற்றாண்டில் பாணர் என்ற இசை வழிவாழ் செய்யும் குலத்தில் பிறந்தார். பாணர் குலத்தில் அவதரித்ததால் திருப்பாணர் என்றழைக்கப் பட்டார். தீண்டத் தகாத குலத்தில் பிறந்தவர் என்று கருதப்பட்டதால் காவிரியைக் கடந்து அரங்கத்து அம்மானைக் கண் குளிரக் காண இயலவில்லையே என்று வருந்தி காவிரிமேல் அக்கரையில் நின்றபடியே திருவரங்கத்தின் திசையை நோக்கி பாடிவந்தார்.

ஒரு நாள், கண்ணை மூடிக் கொண்டு பாடிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் பெருமானுக்குத் திருமஞ்சனத் தீர்த்தம் கொண்டு வருவதற்காக சாரங்க முனிவர் அங்கு வந்தார். பாணரைக் கண்டு தூரப்போ என்று சொல்ல, காதத்தில் அருகிலிருந்த அவருக்கு அச்சொல் காதில் படவில்லை முனிவர் ஒரு கல்லை எடுத்து எறிய, அக்கல் இவர் நெற்றியே பட்டு இரத்தம் வழிந்தது. அதனைப் பொருட்படுத்தாத முனிவர், தீர்த்தத்துடன் இறைவன் திருக்கோயிலுக்கு வந்தார். பாணர் முகத்தில் பட்ட

Scanned with CamScanner

அடி அருங்கனை நெஞ்சில் பட்டது. திடுக்கிட்டு
விழித்தது. அதைக் கண்ட இளிவர் வருந்தி,
இரவில் உறங்காமல் இருந்தார். அவர் கவலை
போக்கியவித்த அரங்கன் நமக்கு அருள்புரிவான்
பாண் பெருமானை நீர் தெய்வமாக நினையாமல்
உன்னுடைய தோளில் தூக்கிக் கொண்டு நம்மிடையே
அழைத்து வாரும் என்று நியமித்தான்.
பாடல் அறிவுகம் - அமலன் ஆதிபிரான்.

மறுநாள் பாணரிடம் சென்று பெருமான்
நியமித்ததை கூறினார். இளிவர். மறுத்த பாணரை
வற்புறுத்தி சம்மத்து கொண்டு வந்து இறைவன் முன்
நிறுத்தினார். அவரும் பாதத்தை தேசமாக இறைவனை
அணைவித்து அனுபவித்து "அமலனாதிபிரான்" என்று
தொடங்கி பத்துப் பாசுரங்களைப் பாடினார்.
அந்தப் பாணரும் மாலவன் அன்பு வைத்து அவனையே
நினைந்து இறைவனுடன் கலந்தார் என்பது
புராண வரலாறு. தம் பாசுரங்களில் மனிதர்கள்
எப்படி பக்தி வழியில் வாழவேண்டும் என்ற
நெறிகளையும், இறையனிடம் சரணாகதி
அடைவதன் அவசியத்தையும் அழகாகப்
பாடியுள்ளார்.

Scanned with CamScanner

பாடல் சிறப்பு :

திருப்பாணாழ்வார் திரைவுண அழியனைனை தன்னைத் தேடி வந்து ஆட் கொண்டதாக குறிப்பிடுகிறார். மேலும் அரங்கன் வெரும்புகையிக் கொண்டனாக விளங்கினாலும் அவன் அணிந்திருக்கும் ஆடையே அவது சிந்தனையை எ.ப்படுதுத உள்ளது என்றும். தாமரை மலர் தன் உயிரைக் கவர்ந்ததாகவும், அவர் அணிந்திருக்கும் ஆபரணம் (அரைஞான்) தன் மனதில் நிலைத்து நிற்பதாகவும், திருவரங்கனின் திருவார்பு அவனை ஆட் கொண்டதாகவும், அன்புடையது என்றும் திருப்பாணாழ்வார் கூறுகிறார்.

சிவனின் வெண்மைநிறை போக்கியவன் திருமால் : அவனது நெற்றியில் அடியவரைக் கவர்கிறது. சங்கும் சக்கரமும் உடையவனின் வாயிதழும் புன்சிரிப்பும் மனதைக் கொள்ளை கொள்வதாகவும் குறிப்பிடுகிறார் திருமாலின் திருக்கண்கள் அடியவரின் கல்மனத்தைப் போதமை அடையச் செய்யும் என்றும் ஆலிலையில் கிடந்த அரங்கன், அடியவரின் மன அடக்கத்தை மீறிவிட்டான் என்றும். அதனால் மனதைக் கட்டுப்படுத்த இயலவில்லை என்றும் திருமாலின் உருவத்தைக் கண்டு கண்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் குறிப்பிட்டு திருமாலின் அருமை பெருமைகளை கூறி மகிழ்கிறார்.

Scanned with CamScanner

4 மதுரகவியாழ்வார்

கண்ணிநுண் சிறுத்தாம்பு

மதுரகவியாழ்வார்.

திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரிக்க அருகிலுள்ள திருக்கோளூர் என்னும் ஊரில் அவதரித்தவர். மதுரகவியாழ்வார் நம்மாழ்வார் அவதரிப்பதற்கு முன்னே கருடனுடைய அம்சமாகவும், குருகூர் என்னும் கணாதிபருடைய அம்சமாகவும் இவர் அவதரித்தார். இளமையில் எல்லாக் கலைகளையும் கற்றுக் கவிபாட வல்லவராகி 'மதுரகவி' என்னும் பெயர் பெற்றார். வடநாட்டுத் திவ்ய தேசங்களைச் சேவித்து விட்டு வேதநாடு சென்றார். அயோத்தி நகரை அடைந்து அங்கு நிகமாந்த மகா பிரதாணையும் சுதர்சன பிரதிஷ்டையையும் வழிபட்டுச் சில நாள் அங்கிருந்தார்.

ஒருநாள், திருக்கோளூர் பெருமானைத் திசை நோக்கித் தொழுது கொண்டு தெற்குத் திசையில் கண் செலுத்தினபோது பேரொளி ஒன்று இவர் கண்ணைக் கவர்ந்தது. இது எங்கிருந்து தோன்றுகிறது என்று அதிசய மேலிட்டார் உணர்ந்தி, இரவில் நடந்து வந்தார் திருக்குருகூரில் அவ்வொளி தோன்றுகிறது என்று அறிந்தார். தாம் ஆராய்ந்த அளவில் திருப்புளி ஆழ்வார் நம்மாழ்வாரைக் கண்டு 'இவரே இச்சோதி உரு'

Scanned with CamScanner

என்று அறுதியிட்டார். இவர்க்கு உணர்வு உண்டோ என்று அறிய ஒரு கல்லை எடுத்து அவர் முன்னே போட்டார். அவ்வொலி கேட்டு நம்மாழ்வார் கண்விழித்தார். மதுர கவிகள் இவர் வாய் பேசுவாரோ? என்றறிய

செத்தகின் வயிற்றில் சிறியது பிறந்தால்
எத்தைத் தின்று எங்கே கிடக்கும்,
என்று கேட்க

அத்தைத் தின்று அங்கே கிடக்கும்,
என்று நம்மாழ்வார் பதில் கூறுகிறார்.
அறிவற்ற உடலோடு அணு அளவான சித்தாவுக்குத் தொடர்பு உண்டானால், அவ்வாத்மா எனை அனுபவித்துக் கொண்டு எதைப் பற்றி இருக்கும். அதிலிருக்கும் என்ப தன்வாங்கணையே அனுபவித்துக் கொண்டு அவ்வுடலையே பற்றியிருக்கும்,

அதைக் கேட்ட மதுரகவி நம்மாழ்வாரை வணங்கி அவருக்கு கைங்கர்யம் செய்து வந்தார். பின்னர் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகியவற்றை நம்மாழ்வார் உபதேசித்தார். அதனால் மனமகிழ்ந்து மதுரகவியாழ்வார் ஏடு வேறடைந்தார்.

Scanned with CamScanner

பாடல் அறிமுகம் - கண்ணிநுண் சிறுதாம்பு.

நம்மாழ்வார் கூறிய தலையாய் பிரபந்தத்தை வாடி மகிழ்ந்தார். மதுரகவி நம்மாழ்வாரின் விக்கிரகத்தை அமைத்து உற்சவங்களை நடத்தினார். திருவாய்மொழியின் பெருமையை உலகுக்கு அறியும்படி செய்தார். அவ்வாறு நம்மாழ்வார் தொடர்பாகப் பாடப்பெற்றதே கண்ணிநுண் சிறுதாம்பு ஆகும். இதனை இசையோடு பாடிப் பரவினால் பின்னர் திருநாடு அலங்கரித்தார். (கண்ணி நுண் சிறுதாம்பு - நூலில் வரைந்திடப்பட்ட கயிறு)

பாடல் சிறப்பு:

மதுரகவியாழ்வார், நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வத்தை அறிந்திலர். நம்மாழ்வாரின் பெயரைச் சொன்னால் நாவினில் இனிமை உண்டாகும் என்றும், ஆழ்வாருக்கு அடிமை பூண்ட அடியவனால் இருப்பது தான் பிறவியெடுத்ததின் பயன் என்றும், அந்தணன் ஏற்றுக் கொள்ளாத கன்னை - தாய் தந்தையாக இருந்து ஆட்கொண்ட நம்மாழ்வாரே தன் தலைவர் என்றும் கூறி நம்மாழ்வாரிடம் தான் கொண்டுள்ள பக்தியை வெளிப்படுத்துகிறார்.

நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியை கேட்ட மனம் கொண்டவர் கற்றறிந்தால் அன்புடைய மனம் கொண்டவராக மாறுவர் என்று கூறுகிறார். ஆழ்வாரின் புகழும் போற்றும் தன்னை அடிமை

Scanned with CamScanner

கொப்பார் என்றும் துடனி. அவரது பாடல்களின் சிறப்புணை பலருக்கும் அறிவிப்பதே தமது தலையாயக் கடமையெனவும் கொண்டிருக்கிறார். நம்மாழ்வாரின் தத்துவப் பாடல்களை என்றும் நினைத்து கிருக்கக் கூடியது என்றும், திருவாய்மொழியை உணர்த்திய ஆழ்வாருக்குத் தொண்டு செய்வதை தனது பணியாகவும் என்றும், பிறரை நல்வழிப்படுத்தும் நம்மாழ்வாரே தமக்கு அன்பானவர் என்றும் நம்மாழ்வாரின் வேண்டுகோளை மறைத்தற்றுகிறார். மதுரகவியாழ்வார் - நம்மாழ்வாரை தெய்வமாகக்கருதிய மதுரகவியாழ்வாரின் பாடல்களை நினைப்பவர் வீடுபேறு (முக்தி) அடைவர்.

கண்ணிநுண் சிறுதாம்பு - ஒருசொல் கூறுக.

கண்ணிநுண் சிறுதாம்பு - நமனியில் முதிசிடப்பட்ட சிறு கயிறு என்பது அதுவும்

நம்மாழ்வார் யார்?

ஒற்காரியாரின் புதல்வர் நம்மாழ்வார். அன்பு ஆதரவுடன் மழலையரைக் கனிவு நோக்கி அனைத்தும் நற்பொருளை பாவடிவுகளை ஈந்தார்.

கண்ணன் செய்த மாயம் எது?

பல முடிச்சுகளைக் கொண்ட கயிறு தனது உடம்பில் அழுத்தும்படி சிறிய கயிற்றினால் யசோதை தன்னைக் கட்டும்படி கண்ணன் மாயம் செய்தான்.

Scanned with CamScanner

அலகு – 3

சிற்றிலக்கியங்கள்

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் உணர்த்தி மக்களை நன்னெறிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்படும். உறுதிப் பொருள்கள் நான்கனுள் ஏனைமூன்றிலுவோ குறைந்து வந்து கற்பனை, நெய்வ வழிபாடு, தனிமனித வழிபாடு முதலானவற்றிற்கு இடமும் இடம் நருவன சிற்றிலக்கியங்கள். சோழ, பாண்டிய ஆட்சிக் காலங்களுக்குப் பிறகு தமிழகச் சூழலில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

தமிழக வரலாற்றில் கி.பி 1310 தொடங்கி கி.பி 1750 வரையிலான காலம் இரண்டாம் வேற்றரசுக் காலம் எனப்படுகிறது. இரண்டாம் வேற்றரசுக் காலத்தின் தொடக்கத்தில் மொகலாயர்கள் தமிழகத்தை ஆட்சி செய்தனர். மாலிக்காபூரின் படையெடுப்பினைத் தொடர்ந்து இசுலாமியர்கள் ஆட்சி கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் மதுரையில் அமைந்தது. விசயநகரப் பேரரசின் படையெடுப்பிற்குப் பின்னர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு விசயநகர ஆட்சி ஏற்பட்டது. 14 ஆம் நூற்றாண்டிலிருந்து 17 ஆம் நூற்றாண்டின் இற்பகுதிவரை தமிழகத்தில் நிலவிய நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு மொழியின் ஆதிக்கம் மிகுதியாக இருந்தது. கி.பி 17 ஆம்

Scanned with CamScanner

நூற்றாண்டின் இறுதியில் (1795) தஞ்சை நாயக்கரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. அதன்பின் தஞ்சை மராட்டியர்களின் ஆட்சிக் காலம் தொடங்கியது. இவ்வாறாக நான்கு நூற்றாண்டு காலம் தமிழகம் பிறமொழியாளர்களின் ஆட்சி தமிழகத்தில் சமயம், கலை, அரசியல், பண்பாடு, மொழி, இலக்கியம் முதலானவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. புலவர்களை ஆதரிக்க அரசர்கள் இல்லாத காரணத்தால் இக்காலத்தில் பெரிய காவியங்களை படைப்பதற்கான வாய்ப்பு இல்லை. எனவே புலவர்கள் சிறுசிறு பிள்ளைக்கவிகளும் வள்ளல்களைப் பற்றி அவர்களை மகிழ்விக்கும் வண்ணம் சிற்றிலக்கியங்கள் பலவற்றைப் படைத்தளித்தனர். ஒவ்வொரு இலக்கிய வகையிலும் அளவிலும் அதில் தோன்றிய புலவர்கள் ஒரே பாடலில் பற்பல இலக்கியங்களைப் படைத்தளித்தனர்.

சிற்றிலக்கிய காலத்தில் பள்ளு, உலா, தூது, கோபுரம், பரணி, சதகம் முதலான இனவழிப்பாட்டுத் தலைகள் சிறந்தும் தலைபுராணங்களும் தோன்றம் பெற்றன. சிற்றிலக்கியங்களைப் பிரபந்தம் என்றும் கூறுவர். வடிக்கும் உண்டு, பிரபந்தம் என்றால் நன்றாகக் கட்டப்பட்டது என்பது பொருளாகும். சிற்றிலக்கியங்கள் (பிரபந்தங்கள்) 96 என்பது வழக்கு.

Scanned with CamScanner

வீரமாமுனிவர் படைத்தளித்த சதுரகராதியில் பிரபந்த வகை 96 என்னும் குறிப்புக் காணப்படுகிறது. பிற்காலத்தில் தோன்றிய பாட்டியல் நூல்களான பன்னிரு பாட்டியல், வச்சணந்திமாலை, சிதம்பரப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் முதலிய சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை விரிவுரைக்கின்றன.

தொல்காப்பியர் கூறிய 'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' என்னும் சூத்திரம் புதிய சிற்றிலக்கியங்களின் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்தது. அவ்வகையில் சிற்றிலக்கியங்கள் புதுமை என்னும் வகையில் அமைந்து விருந்து என்னும் வகைப்பாடு வழங்கி வருகின்றன.

பிள்ளைத்தமிழ் அறிமுகம்:

சிற்றிலக்கிய வகைகளுள் தொண்ணூற்று ஆறாவது புதுவரவாக சிற்றிலக்கிய வகை பிள்ளைத்தமிழ். தொல்காப்பியத்தில் இடம்பெறும் 'ஆஅண் மருங்கினும் கிழவதாகும்' என்னும் சூத்திரம் இவ்விலக்கிய வகையின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் கடவுளர் பற்றிய தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. எனினும் அதற்கு முறையான தொடக்கத்தைத் தந்தவர் பெரியாழ்வார், அவர் தான் படைத்த பெரியாழ்வார் திருமொழியில் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடல்களைப் பாடியிருக்கிறார். அவரது பாடல்களை பின்னாளில் பிள்ளைத்தமிழ் தனியொரு இலக்கிய வகையாகப் பகுத்து வருவதற்குக் காரணமாய் அமைந்தது.

Scanned with CamScanner

பிள்ளைத்தமிழ் இலக்கணம்.

புலவர்கள் தாம் விரும்பும்

தெய்வத்தையோ, அரசனையோ வள்ளலையோ,
சான்றோர்களையோ குழந்தையாக நினைத்துப் பத்து
பருவங்கள் வகுத்துப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியம்.
குழந்தை பிறந்த மூன்றாம் மாதம் முதலாக
இருபத்தொரும் மாதம் வரை ஒற்றைப்படை மாதங்களை
பருவங்களாக அமைத்துப் பாடப்படும்.

பிள்ளைத்தமிழ் பருவங்கள்:

* காப்புப் பருவம்
* தாலப் பருவம்
* செங்கீரைப் பருவம்
* சப்பாணிப் பருவம்
* முத்தப் பருவம்
* வாரணை அல்லது வருகைப் பருவம்
* அம்புலிப் பருவம்.
* சிற்றில் பருவம்
* சிறுபறைப் பருவம்
* சிறுதேர்ப் பருவம்.

பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய இறுதி மூன்று
பருவங்கள்.

* நீராடல்
* அம்மானை
(அ)
கழங்கு
* ஊசல்.

Scanned with CamScanner

(அ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்.

1. அங்கீரைப் பருவம் 2. அம்புலிப்பருவம்.

— குமரகுருபரர்

குமரகுருபரர்.

இவர் திருவிளையாயக்கர் காலத்தில் வாழ்ந்த வெகுமுலவர் தூத்துக்குடி மாவட்டம் பரீவைகுண்டத்தில் பிறந்தவர். உளமையாக இருந்த குழந்தை திருசெந்தூர் முருகன் அருளால் பேசும் திறன் வெற்றுக் கவிபாடியது என்ற சிறப்புக்கு உரியவர்.

பாடல் அறிமுகம்:

கவிஞர்கள் தாம் விரும்பும் தெய்வத்தையோ அரசனையோ சான்றோரையோ குழந்தையாக பாவித்துப் பாடுவதே பிள்ளைத்தமிழ் என்றும் சிற்றிலக்கிய வகையாகும். குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் 21-ஆம் மாதம் வரை ஒரு பருவத்திற்கு இரண்டு மாதங்களாகப் பகுத்து பத்துப் பருவங்களாகப் பாடப்படுவதே பிள்ளைத் தமிழ் ஆகும். ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாடல்களாக 100 பாடல்கள் பாடப்படும். இவ்விலக்கியம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். காப்பு தால், செங்கீரை, தாலப்பருவம், முத்தம், வருகை, அம்புலி என்பன இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவாகும். இவற்றோடு கழங்கு, அம்மானை, ஊசல் என்பன பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் சிறப்புறை, சிற்றில்.

சிறுதேர் என்பன வண்ணார் பிள்ளைத்தமிழுக்கும் பாடப்படும்.

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் முருகப்பெருமான் மீது பாடப்பெற்றது. கானின் பாடும் சோழநாட்டில் உள்ள வைத்தீஸ்வரன் கோயிலில் எழுந்தருளியுள்ள முத்துக்குமாரசாமி எனும் முருகப்பெருமானைப்பற்றி உள்ளம் உருகிப் பாடிய சிறப்புடையது இந்நூல். தேன் எனினிக்கும் சீர்மைச் சொல்லடிகும், பொருளடிகும், இசையினிமையும் கலந்து கற்பார் நெஞ்சை ஈர்த்து எழும்பையும் உருக்கும் தன்மையுடையனவாக இப்பாடல்கள் திகழ்கின்றன. இந்நூல் பாடப்பகுதியாக செங்கீரைப் பருவம், அம்புலிப் பருவம் என்ற இரு பகுதிகளிலிருந்து ஏழுவெண் பாடல் தொகுக்கப்பட்டுள்ளது. பாடல் எழுந்த சூழல்:

குமரகுருபரர் திருச்செந்தில் முருகப்பெருமான் திருவருள் ஆணைக்கினங்க, நானகு நாழி வடநாட்டிற்குப் புறப்பட்டுச் செல்லையில் தருமபுரம் சென்றார். அங்கே மடலாயத்தில் நான்காம் குருமூர்த்தியாகத் எழுந்தருளியிருந்த மாசிலாமணி தேசிகரிடம் நானாவதேசம் பெற விரும்பி அவர் ஆணைப்படி சிதம்பரம் செல்லப் புறப்பட்டு புள்ளிருக்கிவேளூர் என்கிற வைத்தீசுவரன் கோவிலை அடைந்து முருகக்கடவுள் விருப்பப்படி முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் பாடியருளினார்.

Scanned with CamScanner

பாடல் சிறப்பு:

இவருக்குவர், தான் வணங்கும் திருக்கண்ணை குழந்தையாக பாவித்து "மேல்நோக்கிப் பார்த்திருந்த முக அழகு, கண்ணை படாமல் தலைநிமிர்ந்து அசைந்து ஆடுக" என்கிறார். மேலும், உலக உயிர்கள் மீது வேறு அருளும் கருணையுடன் விளையாடுவதற்கு நிலவை அழைக்கிறார்.

சொங்கீரைப் பருவம் என்றால் என்ன?

ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி தலைநிமிர்ந்து முகம் அசைய சொங்கீரை போல ஆடுதல் ஆகும்.

அம்புலிப் பருவம் என்றால் என்ன?

வானத்திலுள்ள நிலவை, குழந்தையுடன் விளையாடுதற்குச் செவிலித்தாய் அழைக்கின்ற பருவம் அம்புலி - நிலவு.

நான்கு உலகங்கள் எவை?

